

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2024) சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, அதன் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், துணை முதலமைச்சரின் செயலாளர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, பேரிடர் மேலாண்மை இயக்குநர் வ.மோகனச்சந்திரன், உள்ளிட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.




சென்னை, தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் (04.10.2024) நடைபெற்ற தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்தின் பதினான்காவது பட்டமளிப்பு விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறப்பு விருந்தினர் பத்ம ஸ்ரீ திருமதி. அனிதா பால்துரை, துணைவேந்தர் பேராசிரியர் மு.சுந்தர் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திராவிட மாடல் ஆட்சியில் அதிக உள்நாட்டு உற்பத்தி - உயர்கல்வியில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது!

# தமிழ்நாட்டில் குவியும் தொழில் முதலீடுகள்!

## உலகப் புகழ்பெற்ற ‘புளூம்பர்க்’ இணைய இதழ் புகழாரம்

**சென்னை, அக்.6-**

**திராவிட மாடல் ஆட்சியில் அதிக உள்நாட்டு உற்பத்தி; உயர் கல்வியில் முன்னணி மாநிலமாக தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் குவிந்து வருவதாக Bloomberg இணைய இதழ் புகழாரம் சூட்டியுள்ளது.**

உலகப் புகழ்பெற்ற Bloomberg நிறுவன இணைய இதழில் தமிழ்நாட்டின் திராவிட மாடல் வளர்ச்சி குறித்து; ‘வணிகம் செய்வதில் தமிழ்நாடு முன்மாதிரி’ என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டுள்ளது. மேனகா தோஷி அந்தக் கட்டுரையை எழுதியுள்ளார். அதன் முக்கியப் பகுதி வருமாறு:

தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டில் ரூபாய் 100 கோடி அதாவது ஒரு டிரில்லியன் ரூபாய் (சுமார் 12 பில்லியன் டாலர்) அளவிற்கு நிகர வருவாய் வருவதால், தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் குவிந்து வருகின்றன.

மிகப்பெரிய கார்கள் மற்றும் மின்னணு பொருட்கள் ஏற்றுமதி செய்யும் - இந்தியாவின் மிகவும் தொழில்மயமான தமிழ்நாடு தற்போது குஜராத் மற்றும் மகாராஷ்டிராவுடன் மட்டுமல்ல, வியட்நாம் மற்றும் மெக்சிகோவுடனும் போட்டியிடுகிறது.

‘ஆப்பிள்’ நிறுவன உற்பத்திக்கான வசதிகளுடன் விரைவில் கூகுள் நிறுவன உற்பத்தி வசதிகளை ஏற்படுத்த உள்ள இந்தத் தென் மாநிலம் அண்மையில் கார்னிங் மற்றும் ஜபில் ஆகியவற்றிலிருந்து 350 மில்லியன் டாலர் மதிப்பிலான திட்டங்களைப் பெற்றுள்ளது.

ஜனவரியில், வியட்நாமில் உள்ள வின்ஃபாஸ்ட் நிறுவனம் மின்சார வாகனங்களை உருவாக்க 500 மில்லியன் டாலர் அளவிற்கு முதல் கட்டமாக முதலீடு செய்ய உறுதியளித்தது.

டாட்டா மோட்டார் நிறுவனம் 10 லட்சம் டாலர் முதலீட்டில் லேண்ட் ரோவர் கார்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை, உலகின் ஆட்டோ மையமாகத் திகழும் இம்மாநிலத்தில் நிறுவத் திட்டமிட்டுள்ளது.

இங்கிருந்து 3 ஆண்டுகளுக்கு முன் வெளியேறிய ‘ஃபோர்டு’ நிறுவனம் தற்போது மீண்டும் தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகில், தொழிற்சாலையைத் தொடங்கி, கார்களை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்ய இருப்பது ஓர் இனிப்பான வெற்றியாகும்.

சீனாவின் ‘பிளஸ்-ஒன்’ போக்குதான் இந்தியாவிற்கு குறிப்பாக தமிழ்நாட்டிற்கு முதலீடுகளைச் செய்யத் தூண்டப்படுவதாக தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

சில ஜப்பானிய முதலீட்டாளர்கள் உற்பத்தியை ஆய்வு செய்வதற்காக சென்னைக்கு தங்கள் நிறுவன குழுக்களை அனுப்புவதாக அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ராஜா (வயது 48) தமது இளம் வயது அதிகாரிகளான தொழிற்துறை செயலாளர், முதலீட்டு நிறுவனத் தலைவர்கள் (40 முதல் 50 வயது வரை உள்ளவர்கள்) சற்று வித்தியாசமாக செயல்படுகிறார்கள்.

சுற்றுச் சூழலில் முக்கிய பங்குதாரர்களை குறிவைக்க உலகளாவிய விநியோக இணைப்புகளை அவர்கள் தீவிரமாக ஆய்வு செய்கின்றனர். முதலீட்டாளர்களை உள்ளூர் விநியோகஸ்தர்களிடம் தொடர்பு கொள்ள வைக்கிறார்கள்.

துறைமுகச் செயல்திறனை அவர்கள் மேம்படுத்துகின்றனர். தமிழ்நாடு தொழில் தொடங்குவதற்காக வெளி நாட்டின் முதலீட்டாளர்களை தற்போதுள்ள முதலீட்டாளர் களுடன் இணைக்கும் முயற்சியில் அவர்கள் செயல்படுகிறார்கள்.

அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோவில் கடந்த ஆகஸ்ட் மாதம் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் பங்கேற்ற முதலீட்டா ளர்கள் மாநாட்டில், ‘ஃபர்ஸ்ட் சோலார்’ நிறுவன

Bloomberg

தலைமை அதிகாரி, தமிழ்நாட்டில் தனது நிறுவன அனுபவத்தை பகிர்ந்து கொண்டதோடு, சிறந்த ‘பிராண்டு அம்பாசிடர்’ போலவே பணியாற்றினார்.

குஜராத் மாநிலம் இரண்டு பெரிய ‘செமி கண்டக்டர்’ திட்டங்களை பெற்ற உடன், தமிழ்நாடும் ‘செமி கண்டக்டர்’ திட்டத்தில் முதலீடுகள் வெறுவதில் தீவிரமாக உள்ளது.

“ஆய்வும், வளர்ச்சியும் எங்களது பலம். இந்தியாவில் திறமை வாய்ந்தவர்களில் அதிகம் தமிழ்நாட்டில்தான் உள்ளனர். அதிகப்படியான ‘பேட்டண்டு’ (காப்பீடு) கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே நாங்கள் அறிவுப் பொருளாதாரத்தில் செயல்படுகிறோம்” என்றும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டார்.

வாஷிங்டனை மையமாகக் கொண்ட சர்வதேச ஆய்வுகளுக்கான மையத்தின் மூத்த ஆலோசகர் ரிச்சர்ட் ரோசோவ் குறிப்பிடுகையில், ‘இந்தியாவில் முதலீடு செய்வது என்பது கார் வாங்குவது போன்றது. அவரது கூற்றுப்படி ஒன்றிய அரசின் கொள்கைகள் வெளிப்புறங்களை குறிக்கின்றன. ஆனால் மாநிலங்கள் உள்கட்டமைப்பு மற்றும் தரத்தை நிர்ணயிக்கின்றன’ என்றார்.

‘மண்டல அளவில் உற்பத்தி செய்யும் முதலீட்டாளர்கள் பலமுறை தமிழ்நாட்டைத்தான் கூர்ந்து நோக்குகிறார்கள். மாநிலத்தின் அணுகுமுறையும் மிகமிக முக்கியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமூகப் பொருளாதார வளர்ச்சியுடனான திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவிலேயே அதிக உள்நாட்டு உற்பத்தி கொண்ட மாநிலமாகவும், உயர் கல்வியிலும் முன்னணியில் உள்ள மாநிலமாகவும், நாட்டிலேயே தொழிற்சாலைகளில் அதிகமாக பணியாற்றும் (40 சதவிகிதம்) பெண்கள் மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது.

வர்த்தகத்தைப் பொறுத்த வரை தமிழ்நாட்டில் அதிக அளவிலான சிறிய, நடுத்தர தொழிற்சாலைகள் உள்ளன. வேலை வாய்ப்பும் உள்ளன. ஏற்றுமதிக்கான நிலையும் சிறப்பாக உள்ளது.

தமிழ்நாட்டில் படித்த தொழிலாளர்கள், அதிகமான விநியோகத்திறன், கொள்கை ஊக்குவிப்பு இவைகளால், மகாராஷ்டிரா, ஆந்திரா, ஒடிசா மாநிலங்கள் தமிழ்நாட்டை பின்பற்றுகின்றன.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இஸ்லாமியர்களின் உரிமைகளைப் பறிக்கத் திட்டமிடும்

## ஒன்றிய அரசின் செயலை தடுத்து நிறுத்திடுவீர்!

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி.யிடம் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மனு!

சென்னை, அக்.6-

“இஸ்லாமியர்களின் உரிமைகளைப் பறிக்கத் திட்டமிடும் ஒன்றிய அரசின் செயலை தடுத்து நிறுத்த வேண்டும்” என்று கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி.யிடம் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமா அத் அமைப்பினர் கோரிக்கை மனு அளித்தனர்.

இதுகுறித்து தவ்ஹீத் ஜமா அத் அமைப்பினர் அளித்துள்ள மனு விவரம் வருமாறு:-

சிறுபான்மை சமுதாய நலன்களுக்காக தாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறீர்கள். நீங்கள் அங்கம் வகிக்கும் திராவிட முன்



சென்னையில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் கொறடாவுமான ஆ.ராசா அவர்களை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பினர் சந்தித்து வக்ஃப்சட்ட திருத்த மசோதாவை அமல்படுத்தக்கூடாதற்கான காரணங்களை விளக்கி கோரிக்கை மனு அளித்தனர்.

னேற்ற கழகமும் சி.ஏ.ஏ. எனும் கருப்பு சட்டத்திற்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

இந்திய மக்களின் முன்னேற்றத்தை குறித்து எந்த அக்கறையும் இல்லாமல், மத வெறுப்பு அரசியலை மட்டுமே முன்னிறுத்தி ஆட்சி நடத்தும் மைனாரிட்டி பா.ஜ.க. அரசின் அனைத்து பித்த லாட்டங்களையும் தி.மு.க. அரசு தோலுரித்து வருகிறது.

காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து நீக்கம் முத்தலாக் தடை சட்டம், சி.ஏ.ஏ. எனும் கருப்பு சட்டம் ஆகியவைகளை தொடர்ந்து தற்போது வக்ஃப் சட்டத்தை பா.ஜ.க. கையிலெடுத்துள்ளது.

இந்த திருத்தங்களில் நிறைய குளறுபடிகள் இருக்கிறது. அரசியலமைப்பு பிரிவு 30 ஐ கொஞ்சம் கூட மனதில் நிறுத்தாமல் இந்த சட்ட திருத்தங்கள் கொண்டு வரப்படுகிறது.

உதாரணமாக, முஸ்லிம் அல்லாதவர்கள் வக்ஃப் வாரியத்திற்கு தானம் செய்யக்கூடாது ஆனால் நிர்வாகம் செய்ய வேண்டும் என்பது தவறான நோக்கம் கொண்டதாக உள்ளது.

அதே போல, ஆக்கிரமிப்பு செய்பவர்களுக்கு பிணையில் வர முடியாத இரண்டாண்டு சிறை தண்டனையை ரத்து செய்வதும் தவறான நோக்கம் கொண்டதாக உள்ளது.

நிறைய குளறுபடிகளுடன் சட்டத் திருத்தங்களை ஏற்படுத்தி ஆக்கிரமிப்பாளர்களை நில உரிமையாளர்களாக மாற்றவும், இஸ்லாமிய சமுதாய மக்களின் உரிமைகளைப் பறிக்கவும் ஆளும் ஒன்றிய அரசு திட்டமிடுகிறது. எதிர்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பால் அது நாடாளுமன்ற கூட்டுக் குழுவிற்கு சென்றது.

வக்ஃப் வாரிய சட்டத்தில் 44 திருத்தங்களைக் கொண்டு வரும் இம்மசோதாவிற்கு கடுமையான எதிர்ப்பை நாங்கள் பதிவு செய்கிறோம்.

பாராளுமன்ற கூட்டுக் குழுவினர், வக்ஃப் சட்ட திருத்த மசோதா மூலம் ஏற்படும் அனைத்து கேடுகளையும், இதனால் உண்டாகும் அரசியல் சாசன சட்ட முரண்கள் அனைத்தையும் உரிய முறையில் ஆளும் ஒன்றிய அரசின் பார்வைக்கு கொண்டு செல்ல வேண்டும் என தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அந்த மனுவில் கூறியுள்ளனர்.

### மகாராஷ்டிர மாநிலத்தில்

## இந்தியா கூட்டணி நிச்சயம் ஆட்சியை கைப்பற்றும்!

### தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் உறுதி!

மும்பை, அக்.6-

மகாராஷ்டிர மாநிலம் சாங்லியில் செய்தியாளர்களிடம் பேசிய சரத்பவார், மகாராஷ்டிரத்தில் இடஒதுக்கீடு கோரி போராடிவரும் மராத்தா சமூகத்தினரின் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே பொதுவான கருத்தாகும்,

அதேநேரம், அந்த இடஒதுக்கீடு மற்ற சமூகத்தினரின் வரம்பை பாதிக்காமல் இருப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

தற்போதுள்ள 50 சதவீத இடஒதுக்கீடு உச்ச வரம்பை நீக்க அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை ஒன்றிய அரசு கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தினார்.

அண்மையில் நடந்து முடிந்த மக்களவை தேர்தலில் மாநிலத்தில் மொத்தமுள்ள 48 தொகுதிகளில் 30 இல் வெற்றி பெற்ற மகா விகாஸ் அகாடி கூட்டணி, நடப்பாண்டு இறுதியில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலிலும் நிச்சயம் ஆட்சியை கைப்பற்றும் என நம்பிக்கையுடன் தெரிவித்தார்.